## DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No.275/2025
Prosecution witnesses. PW1, LW2

| | |
|---|---|
| பெயர். திரு. ராஜன் | ஜாதி. |
| தந்தை பெயர்.திரு.ராஜமாணிக்கம் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 16th day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 19.01.2025ம் தேதியில் நான் மதுராந்தகம் மதுவிலக்கு பிரிவில் முதல் நிலைய காவலராக பணியாற்றிய போது காவல் ஆய்வாளர், முதல் நிலை காவலர் சீனிவாசன் ஆகியோருடன் காலை 8.00 மணிக்கு மேல்மருவத்தூர், சித்தாமூர் ஆகிய இடங்களில் கண்காணித்தபோது செய்யூர் அருகே வந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பெரும்பாக்கம் கிராமத்திற்கு சென்று நீதிமன்ற ஆஜர் எதிரி சங்கர் என்பவர் அவரது வீட்டில் மண்பாணையில் பனங்கள் வைத்திருந்தார். மேற்படி ஒரு லிட்டர் பனங்கள்ளை சுமார் 2.00 மணிக்கு மேற்படி கல்லை மகசரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சியாக முதல் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு **செய்யப்படுகிறது.** மேற்படி பனங்கல்ளை அந்த இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டது. அழித்தல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் செய்தேன். **(அந்த அழித்தல் மகசரில்**

**உள்ள முதல் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் 30 கி.மீட்டர் இருக்கும். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் என் சொந்த வாகனத்தில் சென்றோம். எத்தனை பேர் சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர் திருமதி.மங்களபிரியா, நாங்கள் சென்றோம். மேற்படி பனங்கள்ளை யார் முகர்ந்து பார்த்தது என்றால் ஆய்வாளர் தான் முகர்ந்து பார்த்தார். புளித்த வாடை வந்ததால் மருத்துவமனைக்கு சென்றார்களா என்றால் இல்லை. பனங்கள்ளை ஆய்வுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை.

பொதுஜன சாட்சிகள் யாராவது இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. எங்கள் ஆய்வாளர் போட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் எங்கள் ஆய்வாளர் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பார் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
**Cheyyur**